உறுப்பினர் குறிப்பிட்டதை அவர் இங்கே மற்றொரு கேள்வியாக போடுவார் களேயானால் அதற்கான விளக்கங்களை அரசு அறிவிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 185, திரு. ஆ. கு. சீனிவாசன், இருக்கையில் இல்லை. அவருக்கு பதிலாக டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்.

185—

சென்னை-செங்கத்திற்குப் பேருந்து இயக்குதல்

***36635**—திரு. ஆ. கு. சீனிவாசன் :*

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரணமல்லூர் வழியாக சென்னையிலிருந்து செங்கத்திற்கு இயக்கப்பட்டு நிறுத்தப்பட்ட 141-பி பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகப் பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோரிக்கை வழித்தடம் ஒரு சுற்று வழித்தடமாக, 11 கி.மீ. அதிகம் உள்ளதால் பயணிகள் விரும்பிப் பயணம் செய்வதில்லை. மேலும் இத்தடத்தில் போதிய பேருந்து வசதிகள் உள்ளது. எனவே 141-பி பேருந்தை மீண்டும் பெரணமல்லூர் வழியாக சென்னையிலிருந்து செங்கத்திற்கு இயக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

முற்பகல் 10-15

டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தின் பேருந்து செங்கம், போளூர், பெரணமல்லூர் வழியாக சென்னைக்கு சென்று கொண்டிருந்தது. 141-பி அந்த என்ற வழித்தடப் பேருந்து, கடந்த 6 மாதங்களாக, பெரணமல்லூர் வழியாக சென்ற அந்த வழித்தட 141-பி பேருந்து ஆரணி வழியாக சென்னை சென்று கொண்டிருக்கிறது. எனவே, மீண்டும் அதை பெரணமல்லூர் தொகுதிக்கு, போளூர் வழியாக, சென்னைக்கு இயக்கினால் ஒரு பக்கம் சென்னைக்கும், மற்றொரு பக்கம் செங்கத்திற்கும், போளூருக்கும் தொடர்பு ஏற்படும் என்ற நோக்கத்தில்தான்

1995 ஏப்ரல் 3]

இந்தக் கேள்வியை உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். எனவே செங்கத்திலிருந்து தொடர்பை பெரணமல்லூருக்கு ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக மீண்டும் அந்த வழித்தடத்தில் 141-பி பேருந்தை இயக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து செங்கத்திற்கு இயக்கப்படுகின்ற பேருந்துகளை இயக்கிக் கொண்டுதான் இருக்கிறோம். பெரணமல்லூர் வழியாக பேருந்துகளை இயக்கினால் பெரணமல்லூருக்கும் செங்கத்திற்கும் இது இணைப்பாக இருக்கும் என்று கருதுகிறீர்கள். சென்னையிலிருந்து பயணிகள் பயணம் மேற்கொள்ளுகிறபோது 11 கிலோ மீட்டர் தூரம் அதிகமாக உள்ளது என்ற அடிப்படையில் பயணிகள் மேற்படி வழித்தடப் பேருந்துகளில் சரியாக ஏறுவது கிடையாது. குறைவான பயணிகளை ஏற்றிக்கொண்டு அந்தப் பேருந்துகளை இயக்கமுடியாத சூழ்நிலை இருக்கிறது. எனினும் மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையை மீண்டும் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வேடியப்பன்.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து செங்கத்திற்கு சென்று கொண்டிருந்த 141-பி பேருந்து பெரணமல்லூர் வழியாக சென்று கொண்டிருந்தது. 141-சி வண்டி தான் ஆரணி வழியாக விடப்பட்டது. அதை ஏனோ அதிகாரிகள் மாற்றியிருக்கிறார்கள். தயவு செய்து அதை மீண்டும் ஆய்வு செய்து 141-சி ஆரணி வழியாகவும், 141-பி பெரணமல்லூர் வழியாகவும் மாற்றி விடப்படுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 141-சி என்ற பேருந்துக்கான விளக்கம் என்னிடத்திலே இல்லை. நான் உடனடியாக உரிய அதிகாரிகளுடன் பேசி அதை சிறப்பான முறையிலே இயக்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும். 141-பி பேருந்து பெரணமல்லூர் வழியாக சென்னைக்கும் செங்கத்திற்கும் இயக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. அந்த வழித்தடத்தில் பயணிகளின் எண்ணிக்கை குறைவாக இருக்கின்ற காரணத்தினாலே அந்தப் பேருந்து பெரணமல்லூருக்கு மட்டும் இயக்கப்படவில்லையே தவிர சென்னைக்கும் செங்கத்திற்கும் இடையே இயக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. அரசு அதை மீண்டும் பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 186, திரு. வே. தம்புசாமி இருக்கையில் இல்லை.

வினா எண் 187, திரு. எம். கே. சுந்தரம், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

187—

பெண்ணையாற்றில் மேம்பாலம் கட்டுதல்

***22545**—திரு. எம். கே. சுந்தரம் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டில் இருந்து தானிப்பாடி செல்லும் சாலைக்கு இடையில் உள்ள பெண்ணையாற்றின் தரைப்பாலத்தை மாற்றி மேம்பாலமாக அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். கே. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தனூர் அணையிலிருந்து, விவசாயிகள் நலன் கருதி 90 நாட்களாக திறந்து விடப்பட்ட தண்ணீர் அங்கே பயிரிட்டு வருகின்ற விவசாயிகளுக்கு போதுமானதாக இல்லை என்று சொல்லி, தண்ணீர் திறந்து விடுவதற்கான கால அளவை மேலும் நீட்டித்துத் தரவேண்டுமென்று சொல்லி, தொகுதியில் இருக்கின்ற விவசாயிகள் சார்பாக எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி பேரரசிலே பொதுப்பணித்துறை அமைச்சராகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற மரியாதைக்குரிய அருமை** அவர்களிடத்திலே கோரிக்கையாக வைத்தபோது, விவசாயிகளுடைய நலனில் அக்கறை கொண்டிருக்கிற புரட்சித் தலைவி ஆட்சியில் அதை மறுபரிசீலனை செய்து நேற்றைக்கு அந்த நீர்ப் பாசனத்தை மேலும் சில தினங்களுக்கு நீட்டித்திருக்கின்ற அந்த செயல் எங்கள் பகுதியில் இருக்கிற 10 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பிலே, நெற்பயிரை பயிரிட்டிருக்கிற

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.